2010 ஏப்ரல் 7]

மாற்றப்பட்டுவிட்டது என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான விளைவுகளைத் தடுப்பதற்காக தனித்த ஒரு முயற்சியை எடுத்து அதற்குரிய சட்டத்தைத் திருத்துவதற்கும், அதற்குரிய நடைமுறைகளைத் திருத்துவதற்குமான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிப் பத்திரப் பதிவைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதில் ஒன்றுதான் புகைப்படங்கள் ஒட்டக்கூடிய வழிமுறை. சில இடங்களில் பதிவு செய்கின்றபோது அதே Sub-Registrar Office-ல்தான், அந்த Jurisdiction-க்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த Sub-Registrar Office-ல்தான் பதிவு செய்ய வேண்டும் என்ற விதிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது போலிப் பதிவுகள் இன்றைக்கு தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் வருவாய்த் துறையோடு கலந்து பேசி அதை முடிவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது காலதாமதம் ஏற்படுவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட தங்களுடைய யோசனையைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

28—

கல்வி அலுவலர்

***101855—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலரை நியமித்து அரசாணை (நிலை) எண் 6, பள்ளிக் கல்வி, நாள் 7–1–2010–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 18–1–2010 பிற்பகல் அன்று முதன்மைக் கல்வி அலுவலர் பணியில் சேர்ந்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10–20

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பும்போது அங்கே முதன்மைக் கல்வி அலுவலர் பதவி இல்லாத காரணத்தினால் அது எழுப்பப்பட்டது. கேள்வி அவைக்கு வருவதற்குள்ளே முதன்மைக் கல்வி அலுவலரை நியமித்தமைக்காக நம்முடைய அரசுக்கும், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூரில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் இல்லாத நிலை இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, முதன்மைக் கல்வி அலுவலரை நியமித்ததைப்போலவே மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரையும் உடனடியாக நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? திருப்பூரில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் ஒன்றுதான் செயல்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே நான் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். 1,500 ஆசிரியர்கள் அப்பகுதியில் பணியாற்றி வருகிறார்கள். இரண்டே இரண்டு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மட்டும் இருக்கிறார்கள். மற்ற இடங்களில் 300 ஆசிரியர்களுக்கு 2 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவே, இதைக் கவனத்தில் கொண்டு திருப்பூரில் செயல்படுகிற உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தை இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ பிரித்து, அந்த ஆசிரியர்கள் சிரமமின்றிப் பணியாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஒரு வருவாய் மாவட்டமாகத் தனியாக பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, திருப்பூர் மாவட்டத்திலே இப்போது தொடக்கப் பள்ளிகள் 924—ம், நடுநிலைப் பள்ளிகள் 294—ம், ஆக மொத்தம் 1,218 பள்ளிகள் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பிலே அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உள்ளபடியே அதிக எண்ணிக்கையிலான பள்ளிகள் அங்கே இருக்கக்கூடிய காரணத்தினால், கோவை மாவட்டத்திலிருந்து அதைப் பிரித்து திருப்பூர் மாவட்டத்திலே தனியாக ஒரு தொடக்கக் கல்வி அலுவலகம் தொடங்க வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பள்ளிக் கல்வித் துறையினுடைய பரிசீலனைக்குப் பிறகு இப்போது நிதித் துறையினுடைய ஒப்புதலுக்காக கோப்பு சுற்றனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான அனுமதி கிடைத்ததற்குப் பிறகு, மிக விரைவிலே தொடக்கக் கல்வி அலுவலகம் அங்கே தொடங்கப்பட்டு தொடக்கக் கல்வி அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போல, அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகமும், கூடுதலாக தொடங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையின் மூலமாகவும், என்னிடத்திலே நேரிலேயும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு தொடர்ச்சியாக அதற்கு கீழே இருக்கக்கூடிய உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களையும் முறையான வகையில் உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அந்த முயற்சி விரைவில் நடைபெற வேண்டும் என்று தெரிவித்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன்; திருப்பூரில்

பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் வசிக்கின்ற காரணத்தினாலே, பள்ளிகளில் தொடர்ந்து இட நெருக்கடி அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, நடுநிலைப் பள்ளிகளிலிருந்து வெளியே வரக்கூடிய மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளியும், அதற்கு அடுத்ததாக மேல்நிலைப் பள்ளியும் பற்றாக்குறை என்ற நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. அங்கு ஆண்டுக்கு ஒரு பள்ளி தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்தாலும், அங்கு இருக்கிற தேவைக்கு அது போதுமானதாக இல்லை. ஆகவே, திருப்பூரினுடைய தனித் தன்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, தொகுதிக்கு ஒன்று என்ற எல்லையைத் தாண்டி அங்கு இருக்கிற தேவையைக் கணக்கில் கொண்டு, கூடுதலாக உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் சொல்லக்கூடிய கருத்தை நானும் மிக நன்றாக அறிவேன். எனவேதான் இந்த ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளில் திருப்பூர் மாவட்டத்திலே 4 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. பஞ்சுபாளையத்திலே ஒன்று, முதலிபாளையத்திலே ஒன்று, அருள்புரத்திலே ஒன்று, காரணம்பேட்டையிலே ஒன்று என்று 4 பள்ளிகள் அங்கே தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இவற்றிலே மூன்று பள்ளிகள் திருப்பூரைச் சுற்றி இருக்கக்கூடிய பள்ளிகளாகத்தான் அமைந்திருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 125 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒப்புதல் அளித்து, நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். வரக்கூடிய காலங்களில் மேல்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தும் சூழ்நிலை வருகிறபோது திருப்பூருக்கு உரிய முக்கியத்துவம் தருவதற்கும், தொடர்ச்சியாக உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கும் அரசு நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

2010 ஏப்ரல் 7]

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

திருமதி பெ. பிரபாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்டத்தில், மாவட்டக் கல்வி அலுவலகமும், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகமும் எப்போது தொடங்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டதற்குப் பிறகு இப்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் முறையாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், நான் அண்ணன் திரு. கோவிந்தசாமி அவர்கள் எழுப்பிய வினாவிற்கு இங்கே விடை அளித்திருக்கிறேன். மாவட்டக் கல்வி அலுவலகங்களைப் பொறுத்தமட்டிலே பொதுவாக ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒன்று என்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த அடிப்படையில் உடுமலைப்பேட்டை, தாராபுரம், திருப்பூர் ஆகிய மூன்று இடங்களிலே வருவாய்க் கோட்டங்கள் அந்த மாவட்டத்திலே செயல்பட இருக்கின்றன. வருங்காலங்களிலே தேவைக்கேற்ப நிதிநிலை நமக்கு இடம்கொடுக்கக்கூடியபட்சத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.